1967 ஜூலை 10]

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் கல்வித் துறையிலே அமைச்சராக வருகிறவர்களெல்லாம் கல்வியைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள்—ஆல்வேஸ் லாயர்ஸ்—வக்கீல் தொழிலிலே இருக்கிற அரசியல்வாதிகள்தான் எப்போதும் வருகிறார்கள் என்ற அபிப்பிராயம் ஆசிரியர்களிடம் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? நான் ஆசிரியர்கள் நினைக்கின்ற கருத்தைத்தான் இப்போது எடுத்துச் சொன்னேன். அந்த மாதிரி ஆசிரியர்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது அனுப்பியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழைய மந்திரிகளைப்பற்றிய கருத்துக்களுக்கு, பாராட்டுரைகளுக்கு கனம் உறுப்பினர்தான் பொறுப்பு அதைப் பொறுத்து. ஆனாலும், மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நானாக எந்த முடிவும் எடுப்பதில்லை என்று நான் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே சொல்லியிருக்கிறேன். எதையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என்று, திடீரென்று எந்தப் புதிய மாற்றத்தையும் இப்போது செய்யாமல், ஆராய்ந்து பிறகு முடிவு எடுக்கலாம் என்ற முறையைத்தான் மேற்கொண்டிருக்கிறது இந்த அரசு.

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகள் தங்களுடைய அடிப்படையான கொள்கைகளைக் குழந்தைகள் மனதில் பதிய வைப்பதன் மூலமாகத்தான் புதிய சமுதாயத்தை உண்டு பண்ண முடியும் என்ற அந்த அடிப்படையில் கல்வித் துறையை இயக்க வேண்டுமென்ற கருத்தோடு இந்த அரசு நடந்து கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது, ஏதோ அவர்கள் போக்கிலேயே நடக்க அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன், எந்தக் கட்சிக் கருத்தையும் புகுத்தும் நோக்கம் இல்லை. இந்தத் துறையிலே சிலபல முடிவுகள் எடுக்க, கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறது. அந்தக் குழுவில் பல கட்சித் தலைவர்களும், முக்கிய உறுப்பினர்களும் இடம் பெற இருக்கிறார்கள். ஆகவே, எதுவும் எந்தக் கட்சியின் அடிப்படையிலும் செய்வதாக இருக்காது.

மாவட்ட கழக உயர்நிலைப்பள்ளிகள்

* 224 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :
திரு. முனு. ஆதி :
திரு. கெ. இரா. ஞானசம்பந்தம்: } மதிப்பிற்குரிய

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள போர்டு உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) முன்னாள் மாவட்ட கழக உயர்நிலைப்பள்ளிகள் அரசாங்கத்தாரால் 1—4—1966 முதல் ஏற்கனவே எடுத்துக் கொள்ளப்பட்டன.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன்: ஐயா, இப்போது ஸ்பெஷல் ஈ.ஓ.-க்களின் கீழ் வேலை செய்யக்கூடிய நான்-டீச்சிங் ஸ்டாஃப் களையும் சர்க்கார் சர்வீஸாகக் கணக்கெடுத்து, அவர்களுக்கு ஊதியம் போன்றவைகளை நிர்ணயிக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1—4—1966-ல் மாவட்டக் கழகப் பள்ளிகள் அத்தனையையும் எடுத்துக் கொண்டாகிவிட்டது. ஆனால், அந்தப் பள்ளிகள் தனி நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகின்றன. அதற்காகத்தான் ஸ்பெஷல் டி.ஈ.ஓ.-க்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 மாவட்டங் களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவைகளெல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாங்கப் பள்ளி ஆசிரியர் களுக்குக் கொடுப்பதுபோலக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், நிர்வாகம், சர்வீஸ் கண்டிஷன் எல்லாம் தனித்தனியாக இருக்கின்றன. அவைகளை ஒன்றுபடுத்துவதில் சிலபல குழப்பங் கள் இருக்கின்றன. அந்தக் குழப்பங்களைப் போக்கி எல்லா வற்றையும் ஒன்றுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவிலே இரண்டும் ஒன்றுபடுத்தப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி: தலைவர் அவர்களே, கழக உயர்நிலைப் பள்ளிகளை அரசினர் உயர்நிலைப்பள்ளிகள் என்று மாற்றுவதில் என்ன சங்கடம் இருக்கிறது? 'கழக' என்று இருப்பதாலே சில அரசியல்வாதிகளுக்கு ஒருவிதமான அதிருப்தி இருக்கிறதே, அதை மாற்றுவதில் என்ன சங்கடம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 'போர்டு' என்பதற்கு 'கழகம்' என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. 'எலெக்ட்ரிசிட்டி போர்டு' என்பதற்கு 'மின்சார கழகம்' என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். 'டிஸ்ட்ரிக்ட் போர்டு' என்பதற்கு 'மாவட்டக் கழகம்' என்று மொழிபெயர்த்து கழக உயர்நிலைப்பள்ளிகள் என்று அந்தப் பெயர் நீண்ட நாட்களாகக் கையாளப்பட்டு வருகிறது. இரண்டும் கழக உயர் நிலைப் பள்ளிகளும், அரசினர் உயர்நிலைப்பள்ளிகளும்—ஒன்றாக ஆக்கப்பட்ட நிலையில் 'அரசினர் உயர்நிலைப் பள்ளி' என்ற பொது வான பெயர் பெறும். ஏற்கனவே கழகப் பள்ளிகளுக்கு வகுக்கப் பட்ட சட்ட திட்ட அடிப்படையில் அவைகள் நடக்கிற காரணத் தினால் அந்தப் பெயர் நீடித்து இருக்கின்றது. இரண்டையும் ஒன்றாக ஆக்கும்போது உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் ஏற்படும்.

1967 ஜூலை 10]

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகும் கூட மாணவர்களுக்குப் போதிய இட வசதி, கட்டட வசதி இல்லாத காரணத்தினால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மேலும் கொஞ்சம் தொகை வழங்க அரசாங்கம் முன்வருமா? ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாமல் இருக்கிற காரணத்தினால் மேற்கொண்டு தொகை ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: காரணமே நிதிப் பற்றாக் குறைதான். கிடைக்கிற நிதி வசதியை வைத்துக்கொண்டு பகிர்ந்து அளிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டு 2½ கோடி ரூபாய் கேட்டு, 1½ கோடி ரூபாய்தான் தர வாய்ப்பு வசதி இருந்த காரணத்தினால், அதைப் பகிர்ந்து அளித்து, அதிகம் தேவை இருக்கிற இடங்களுக்கு முன்னிடம் தந்து, அந்தந்த இடங்களுக்கு வேண்டியவைகளைச் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, அரசினர் உயர்நிலைப்பள்ளிகளை நிர்வகிக்க எஸ்.டி.ஈ.ஓ., டி.பி.இ.ஓ., என்று இரண்டு அதிகாரிகள் இருக்கிறார்களே, அந்த இரண்டு பேர்களும் அவசியம்தானா? ஒருவர் இருந்தால் போதாதா? என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது இருக்கிற நிலைமையில் அவர்கள் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இருக்கிறார்கள். மறுபடியும் இதைப்பற்றிப் பரிசீலிக்கிறபோது, இந்த முறை தேவைப்படுமா இல்லையா என்பதைப் பார்த்து, ஸ்பெஷல் டீ.ஈ.ஓ-வை ஒன்றாக இணைக்கும்போது கல்வி மாவட்டங்களுக்கு ஒன்றாக இருக்கலாமா, ஒருவர் இருவரைக் குறைக்கலாமா என்பதெல்லாம் பரிசீலிக்கப்பட்ட பிறகுதான் இதிலே தக்க முடிவுக்கு வர முடியும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தும்போதும், அரசாங்கம் ஒரு பள்ளியை அமைக்கும்போதும் மக்களிடமிருந்து 10,000 ரூபாய் நன்கொடை கேட்கப்படுகிறது. அப்படி இல்லாமல் தனியார் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே ஒரு பள்ளியை ஏற்படுத்துவதற்கு 10,000 ரூபாயைப் பொது மக்கள் திரட்டித் தரவேண்டும், மற்ற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது என்று கொள்கை அடிப்படையில் சென்ற காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. அடிப்படை எப்படி இருக்கவேண்டும், அதைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதா அல்லது மாற்றுவதா என்று இனிமேல் யோசிக்கவேண்டும். அப்படி ஒரு பொறுப்பு பொது மக்களுக்கு இருந்தால்தான் அவர்களுக்கு அக்கறை ஏற்படும். அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும் நிலைமை வந்தால், பொது மக்களுக்கு எளிதாக

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு விடும்; எத்தனை குறைவான மாணவர்கள் இருந்தாலும் ஒரு உயர்நிலைப்பள்ளி வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். அதனாலதான் உயர்நிலைப்பள்ளி என்றால் 10,000 ரூபாய் கட்டவேண்டும், கல்லூரி என்றால் 5,00,000 ரூபாய் கட்டவேண்டும் என்ற முறையை மேற்கொண்டிருந்தார்கள். அந்த முறைதான் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. வெ. முனுசாமி: மானேஜ்மெண்டு நடத்துகிற உயர்நிலைப் பள்ளிகள் அத்தனையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலேயே கூறியிருக்கிறேன். இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

பகுதி நேரப் பட்டப்படிப்பு

*225 வினா.—திரு. க. ர. நல்லசிவன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொறி இயல் துறையில் பகுதி நேரப் பட்டப்படிப்புக்கு இந்த ராஜ்யத்தில் எங்கெங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது?

(இ) கிராமப்புறங்களில் வேலை செய்வோர்களும் பலனடையும் வகையில் இத்திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) தற்பொழுது அத்தகைய பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்பு வகுப்புக்கள் இம்மாநிலத்தில் நடைபெறவில்லை.

(இ) இல்லை.

திரு. க. ர. நல்லசிவன்: மீதியுள்ள மாநிலங்களில் 5, 6, ஆண்டுகளுக்கு முன்பே பகுதி நேர கல்லூரிப் படிப்புகள் ஆரம்பிக்கப் பட்டு விட்டன. ஆகவே, விரைவிலே பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்பு வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்வதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பொறியியல் துறையில் டிப்ளமா பெற்றவர்களுக்கு பகுதி நேர பட்டப்படிப்பு சொல்லிக் கொடுத்து பி.ஈ. பட்டம் கொடுப்பதற்கு இரண்டு கல்லூரிகளில் ஒரு முன்னோடித் திட்டத்தை வகுப்பதற்கு இந்திய சர்க்கார் ஒரு திட்டத்தை வகுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சென்னை பொறியியல் கல்லூரியிலும், கோயம்புத்தூர் பொறியியல் கல்லூரியிலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி பல்கலைக் கழகத்துக்கு 14-6-1967-ல் அனுமதிக்கு விண்ணப்பம்